10th November 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவர்கள் 5½ லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். கணிசமான தொகை கொடுப்பவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்றால், அது வைக்கப்படுகிறது.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இவருக்கு கல்லூரி நிர்வாகத்தில் பங்கு உண்டா என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

* **420 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள மீனாட்சி அரசினர் கல்லூரி நிதிக்காக அண்மையில் நடிகர்களின் கலா நிகழ்ச்சியும், கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மூலம் வசூலான தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; and

(*b*) Variety Entertainment, Rs. 18,765.

Cricket Match, Rs. 63,430.

* **421 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் பெண்களுக்கென ஒரு தனிக் கலைக் கல்லூரி நிறுவ வேண்டும் என்று அவ்வூர் மக்கள் அண்மையில் முதல் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் ஏதேனும் கொடுத்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; and

(*b*) It was decided that no Women's College at Pudukkottai need be opened since there is no immediate need for it.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி இல்லாததால், கலைக் கல்லூரியிலும் இடவசதி இல்லாததால், அடுத்த ஆண்டிலிருந்தாவது அங்கே ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதுக்கோட்டையில் ஒரு நிகழ்ச்சிக்கு நான் போயிருந்தபோதே அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெண்களுக்கு அப்படிக் கல்லூரி வேண்டுமென்றால், ஐந்து லட்ச ரூபாய் நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் யோசிக்கலாம் என்று அப்பொழுதே கூறியிருக்கிறேன்.